"அகரமுதலவெழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றேயுலகு"

புதினப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது. Registered at the G.P.O.

# சுதேசநாட்டியம்.

## THE JAFFNA NATIVE OPINION.

"யதார்த்தவாதி மாசமிருமுறை பகிரங்கஞ் செய்யப்படும் வெகுஜன விரோதி"

மலர் 36 } யாழ்ப்பாணம் வயாவிளான், வெகுதானியஞு ஆடிமீ உரு-ந் வ (9-8-38) செவ்வாய்க்கிழமை { இதழ் 15

### தோத்திரம்

பெண்ணார் பாகத்தர் பிறைதவழ் சடையின ரறைகழல் சிலம்பார்க்கச்
சுண்ண மாதரித் தாடுவர் பாடுவ ரகந்தொறு மிடுபிச்சைக்
குண்ண லாவதோ ரிச்சையி னுழல்பவ ருயர்தரு மாதோட்டத்
தண்ண லண்ணலுகே தீச்சர மடைபவர்க் கருவினை யடையாவே.

(திருஞானசம்பந்தமூர்த்தி)

## வடமாகாணத்துள்ள
# சில இடப்பெயர்களின் வரலாறு.

திரு. ச. குமாரசுவாமிப்பிள்ளை

உரிமைபதிவு.

(முன்தொடர்ச்சி)

கிளாலி (பச்சிலைப்பள்ளி)— கிளாலியெனப் பெயரிய ஆறொன்று மலையாளத்தைச்சேர்ந்த வள்ளுவநாட்டிலேயுள்ளதாம்.

இடைக்காடு (வலி-கி)— இப்பெயருள்ள ஒருதானம் மலையாளத்திலேயுண்டு. இடைக்காடர் என்னும் புலவர் அவ்வூரிற் பிறந்தவராம்.

வல்லிபுரம்.—இது வடமிராட்சி மேற்கைச்சேர்ந்த ஒரு பழைய ஸ்தலமாம். இதன்கண் ஒரு விஷ்ணு ஆலயமுண்டு. அவ்வாலயம் அங்கிருப்பதனாலும், ஆழ்வான், கிருஷ்ணன் முதலிய வைஷ்ணவ நாமங்கள் வல்லிபுரத்திலும் அயற்கிராமங்களிலும் மலிந்திருப்பதனாலும், ஆதியிலே அவ்வூரின்கண் வைஷ்ணவர் வசித்தனரென்று அநுமானிக்கப்படும்.

'வல்லிபுரம்' என்னும் பெயரை விளக்கவந்த சரித்திர ஆசிரியர் 'வல்லியதேவன் அதிகாரஞ்செய்தவிடம் வல்லிபுரமெனப்பட்டது' எனச் சற்றும் ஆசங்கையின்றிச் சாற்றுகின்றனர். இக்கூற்றைத் தக்க வாதாரங் காட்டியன்றோ தாபித்தல்வேண்டும். சரித்திர ஆக்கியோன்வாக்குச் சர்வசன அங்கீகாரம்பெறுமென அன்னவர் எண்ணினர்போலும்.

வடமிராட்சி மேற்கிலே வென்றிபாகுதேவன், (1) வதிரிபாகுதேவன், (2) குருளிபாகுதேவன், சிங்கபாகுதேவன், சேற்கொடிதேவன், சமரபாகுதேவன், மணிவிபாகுதேவன் என்பவர் குடிகொண்டவிடங்கட்கு அவரவர் முழுப்பெயரோடு குறிச்சியென்னுஞ் சொல்லைக் கூட்டி முறையே வென்றிபாகுதேவன்குறிச்சி, வதிரிபாகுதேவன்குறிச்சி, குளிருபாகுதேவன்குறிச்சி, சிங்கபாகுதேவன்குறிச்சி, சேற்கொடிதேவன்குறிச்சி, சமரபாகுதேவன்குறிச்சி, மணிவிபாகுதேவன்குறிச்சி எனப் பெயரிட்டமையும், ஆசிரியரது வல்லியதேவன் அதிகாரம் செய்தவிடத்துக்கு அவன் குலத்தையும் ஆண்மையையுங்குறிக்கும் தேவன் என்னுந் திவ்விய பட்டத்தை அவனது நாமத்தினின்றும் நீக்கி எஞ்சிய வல்லியொடு புரம் என்பதைப்புணர்த்தி வல்லிபுரம் என மகடூஉப்பெயர் விளங்க நாமகரணஞ்செய்தமையும் வெகு விந்தையேயாம்.

சமஸ்கிருத ஸ்காந்தபுராணத்திலுள்ள தக்ஷிணகைலாச மான்மியத்து வல்லிபுர அத்தியாயத்திலே வல்லிபுரவைபவம் வரையப்பட்டிருக்கின்றது. ஆங்குச் சொல்லப்படும் விசேஷ சம்பவமாவது:—

"வசுதேவகுமாரரும் உலகநாதருமாகிய கடவுள் மீன்வடிவத்தைத் தரித்து, அசுரதூதர்களாலே எறியப்பட்ட தேவர்களது கங்கணங்களைக் கடலினின்றுமெடுத்துக் கரையிலிட்டுப் பின்னர் அக்கடலில் மறைந்தார். பின்னொருநாள் அக்கடவுள் திருவிளையாட்டினால், வல்லிபுரத்துக்கு அணிமையாக, வலைத்தொடரிற் பிரவேசித்து மிக்க கோலாகலத் தொனிசெய்தார். இதனை வலைஞர்பார்த்துக் கோபம்மிக்கவர்களானார். அவ்வலைஞர் யாவரும் அக்கடவுளாகிய மீனைப்பிடிக்க விரும்பியவரானார். இந்நிகழ்ச்சியை ஆநந்தத்தோடு பார்க்கும்படி சனங்கள் வந்தபோது அந்தமீன் குதித்துக்குதித்து உலாவி லவல்லி என்னும் பிரசித்தப் பெயரையுடைய ஒருகன்னிகையின் மடித்தலத்தில் மகிழ்வுடன் விழுந்தது. பின்பு அவ்வேளையிலே பேரொளியையுடைய மீனுருவைத் தரித்த விஷ்ணுமூர்த்தியானவர் மானுஷ்யமகவுபோலத் தோன்றினார்" என்னும் இஃதே.

லவல்லி என்னும் வனிதையையே வல்லிபுரம் என்பதிலுள்ள வல்லி குறிப்பதுபோலும். ஸ்காந்தத்திற் சொல்லிய வல்லிபுரமே ஈழநாட்டிலுள்ள வல்லிபுரமெனத் தாபித்தல் எம்மாலே இயலாதெனினும், வல்லிபுரமெனும் பெயர் வைஷ்ணவ மதசம்பந்தமான ஒரு பழந்தலப்பெயரென்பது மறுக்கொணாச் சத்தியமேயாம்.

"வல்லிபுரமாகிய மகாஸ்தலம் விஷ்ணுமூர்த்திக்கு உவப்பைக்கொடுக்கின்ற தலமாகும்" எனவும், "வைகுண்டபதத்தி லநுபவிக்கும் முத்தியின்பதத்தைக் கொடுப்பதுமாம்" எனவும் ஸ்காந்தத்திலே இத்தலத்தின் மகிமை கூறப்பட்டுள்ளது.

கடலையடுத்த வொருதானத்திற் குடியேறி, ஆங்குத் தாம் வழிபடு கடவுட்கு ஓராலயமமைத்து வாழும் வைஷ்ணவமாந்தர் அத்தானத்திற்கு வல்லிபுரமென்னுந் திருநாமத்தை இட்டு வழங்குதலுங்கூடும்.

செங்கற்பட்டிலே கடலோரத்திலிருந்து 20 மைல் தூரத்திலுள்ள ஒரு விஷ்ணுதலத்திற்கு (1) வல்லீபுரம் எனப் பெயரிருப்பதும் ஈண்டுக் கவனிக்கத்தக்கதேயாம்.

(2) கரிகாற் பெருவளவனால் அருவாநாடு 24 கோட்டங்களாகவும், 79 நாடுகளாகவும் வகுக்கப்பட்ட காலத்தே வல்லிபுரமென்பது அந்நாடுகளி லொன்றிற்குரிய பெயராயிருந்ததும் ஈங்கு நோக்கத்தகும்.

மலையாளத்துச் சுதேசிகளெனச் சான்றோரான் மதிக்கப்படுபவரும், மருமக்கட்டாயத்தை அனுசரித்துவருபவரும் (3) முக்குதலினால் [முக்குதல்] (மலையாளவழக்கு) முங்குதல், முக்குளித்தல், முத்துக்குளித்தல்.] முக்குவர் எனப் பெயர்பெற்றவருமான மக்களை முக்கியராய் (முதன்மையுடையோராய்) இருந்தவரென மனோபாவனைபண்ணி அதற்கேற்ற "வெடியரசனென்னும் பட்டங்கொண்ட பரதவர் வமிசத்துப் பரதவர் பரதவருள் முக்கியராயிருந்தமையின் முக்கியரென்றும், பட்டங்கட்டிகளென்றும் பின்னாளில் விளங்குவாராயினர்" எனக் கதைகோத்த சொல்வன்மையுடைய சரித்திராசிரியர் ஒருவர் ஸ்காந்தத்துக் காதையைப் புறக்கணித்துத் தம்மனோராச்சியத்தையே பெரிதெனப் பேணியமை ஆச்சரியமாகாது. அவரது சரித்திரம் அவரது மனோராச்சியத்தையே நன்கு புலப்படுத்துவதாகும்.

வல்லியென்பதற்குப் பூமிதேவியெனப் பொருள்கூறி அத்தேவி மகாவிஷ்ணுவைத் தரிசித்தவிடம் வல்லிபுரமெனக் கூறுவர் ஈழமண்டல சதகாசிரியர்.

(தொடரும்)

எவ்வ துறைவ துலக முலகத்தோ டவ்வ துறைவ தறிவு.



துதி வெண்பா

ஞானஞ் சுகநிதியம் நல்லாயுள் தாவயவை
ஆனைமுக வாகுமரா ஆறுமுகா-ஆனந்தப்
பேர்க்குமர னச்சியந்த்ரம் பீடுபெற்றுநிற்
சீர்த்தியுடன் வந்து செகம் [கவெற்குச்

# சுதேச நாட்டியம்

யாழ்ப்பாணம், வயாவிளான்

வெகுதானியஞு ஆடிமீ" உகூ உ

## இலங்கையில் ஆங்கில அரசு.

எங்கள் இலங்கைத் தீவையும், இதுபோன்ற மற்றும் தீவுகள் தேசங்களையும் அரசுபுரிந்து வருகின்ற ஆங்கிலேய வரசினர் நீதியை நிறைகோல்போல் வைத்துத் தன்னுயிர்போலமன்னுயிரோம்பும் குணமுடையராய் விளங்குவதை நாமெல்லோரும் நன்கறிந்திருக்கின்றோம்.

இந்த அரசினர் முற்காலத்திருந்த தமிழரசர், பறங்கியரசர், ஒல்லாந்தவரசர் போலச் சுயநலவிருப்பும், பொறாமையும் உடையவர்களாயிருக்கவில்லை யென்பதை, இவர்கள் செய்துவரும் பிரஜாபரிபாலனத்திலிருந்து எவரும் நன்குணர்வர். இந்த அரசர் சாதிவேறு, சமயம்வேறு என்றிருந்தாலும், எல்லாச்சாதியார்க்கும், எச்சமயத்தார்க்கும் சுயேச்சை கொடுத்து, அவரவர் தங்கள் தங்கள் சாதிப்படியும், சமயப்படியும் ஒழுகத்தக்க முறைகளில் ஒரு வில்லங்கமும் செய்யாதும், பிறர் ஒருவர் செய்யவிடாதும் கண்ணை இமைகாப்பதுபோற் காத்துப் பரிபாலித்துவருகிறார் என்பதை ஒருவரும் மறுக்கமாட்டார்.

இங்கிலீஸ் அரசினர் இலங்கைத்தீவைக் கைப்பற்றிய காலந்தொடங்கி இதுவரையும் தமது பரிபாலனத்தில் எவ்வகையான முறைகேட்டையும், குறைபாட்டையும் செய்திருக்க வில்லையென்பது உண்மையாகும்.

முதலாவதாக நமது அரசினர் கல்வி விஷயத்திற் பிரசைகளுக்குச் செய்துவரும் நன்மைகளும், உத்தியோக பதவி கொடுத்து ஆதரித்து வருவதும், உத்தியோகம்பார்த்து இளைப்பாறி யிருப்பவர்களுக்கு மாசவேதம் பேன்சன்பணம் கொடுத்து வருவதும், உத்தியோகம் பார்த்து இறந்துபோன உத்தியோகஸ்தரின் மனைவியர்க்கும் பணம் உதவிவருவதும் பிரசைகள் என்றும் நினைக்கத்தகுந்த புண்ணியச் செயலேயாகும்.

அரசபாஷையாகிய இங்கிலீஷ் கல்விக்கு மாத்திரமல்ல தமிழ் சிங்களம் முதலிய சுதேச பாஷைகளை விர்த்திசெய்யும் பொருட்டு அவ்வச் சாதியார்க்காகப் பாடசாலைகளைத் தம்பொறுப்பிற் ருபித்தும், அவைகளிற் சற்பிற்கும் ஆசிரியர்க்குப் பணங்கொடுத்தும் இவ்வித பாடசாலைகளைத் தாபித்தோர்க்கு உதவி நன்கொடைப் பணம் கொடுத்தும் வருவது எவ்வளவு கண்ணியத்துக்குரியதாகும். இதுமாத்திரமா? சுதேசபாஷைக் கல்வியைக் கட்டாயப் படிப்புமுறையில் வைத்து, அவ்வப் பாடசாலைகளில் கல்விகற்கும் வறிய பிள்ளைகளுக்கு மத்தியானப் போசனம் உதவியும் வருவதை எந்த அரசர் செய்தார்? செய்வார். என்பதை யார்தான் அறியாதிருக்கின்றார்.

உயர்ந்த உத்தியோகங்களைப் பார்த்து இளைப்பாறியவர்களுக்கும், பார்த்துக்கொண்டு இருப்பவர்களுக்கும், தகுதிநோக்கி, சமாதான நீதவான், கண்ணியப் போலிஸ்நீதவான், சேர்ப்பட்டம், நைற்பட்டம், அதிகாரம், முகாந்திரம் என்னும் கண்ணியப் பட்டங்களை உதவி அவர்களைக் கனப்படுத்தியும் வருகின்றார். பொறாமையும் சுயநல விருப்புமுள்ள அரசியலில் இப்படிப் பட்டங்கள் கிடைக்குமா? கொடுப்பதுயார்? என்பன கேள்விக்கிடம் நிற்க:-

பிரசைகளின் பிரயாணவசதி நோக்கி, எத்தனை புகையிரதப் பாதைகளையும் றோட்டுப் பாதைகளையும் திறந்திருக்கின்றார், திறந்து வருகின்றார். இந்தப் பாதைகளைத் திறப்பதற்கு எத்தனை மலைகளைக் குடைந்தும், எத்தனை ஆறுகளுக்கு மேற் பாலங்களிட்டும் பெரும்பொருள்செலவிட்டார். இன்றுஞ் செலவு செய்துகொண்டே வருகின்றார். இவை மாத்திரமா?

நோயினால் வருந்தும் பிரசைகளுக்குப் பெரிய பெரிய வைத்தியசாலைகளைத் தம் இராச்சியமுள்ள இடங்கள்தோறும் திறந்து, வைத்தியர்களையும் நியமித்து இலவசமருந்துகொடுத்தும், மருந்துமாத்திரமன்று நோயாளிக்குத் தகுந்தவாறு வேலைகாரரை வைத்து உணவுகள் கொடுத்துக் சாப்பாற்றியும், வயித்தியசாலையிலிருந்த நோயாளி ஒருவன் இறந்துபோனால் அப்பிரேதத்தை அடக்கம் செய்வித்தும் வருகின்றார்.

இப்படியான பெரிய புண்ணிய விஷயங்களைத் தற்காலத்திலுள்ள குடும்பத்தவர் சிலர் அல்லது சுற்றத்தவர் தம்மை மக்களுக்குத்தானும் மனமொருப்பட்டுச் செய்ய முன்வருவாரோ? இவைகளெல்லாம் செய்யப்படுவதற்குக் காரணம் கருணையின்பாற்பட்டதா? அன்றிக் கைலஞ்சத்தின் பாற்பட்டதா? என்பதை அறிவாளிகளும், அறிவிலிகளும் சிந்திப்பது உசிதமாகும்.

ஒவ்வொரு நாடுகளிலும், குடிவெறியினாலும், அதிகாரம் நாட்டாண்மை என்னும் சுயேச்சையான அதாவது கேட்பாரில்லாத என்பதுபோன்ற ஆணவத்தினாலும் கலகங்களைச் செய்தும், செய்வித்தும் வரும் நட்டாமுட்டிகளைப் பிடித்து, விசாரணைபுரிந்து, அவரவர் செய்த குற்றங்கட்குத் தக்கபடி தண்டனைபுரிந்து வருவதற்குத் தக்க வகையில் கோடுகளை ஸ்தாபித்தும் இக்கோடுகள் நடைபெறுவதற்குப் பெரும் பொருள் செலவிட்டும் வருகின்றார். பொய்வழக்கு வைத்துச் சாட்சிகூறப் போயிருந்தவர்களுக்கும் வத்தாப்பணம் கொடுத்து வருகின்றார் என்றால் இவர் செயலை எத்தகையதென்பேம். சுப்பிறீங்கோட்டு விளக்கத்துக்குச் செல்லும் யூரிக்கனவான்களுக்கும் வத்தாப்பணம் கொடுக்கப்படுகின்றதாமே. ஏன்? கண்ணியமும் நீதியும். படைத்தவரென்ற நிலையில் யூரியென்னும் பதவிக்குப் போகிறவர்கள் தம் சுதேசிகள் விஷயமாகப் பணம் வாங்காதிருப்பதே இவர்கள் பெருந்தகைமைக் கழகாகும். இதுதானா? தேசத்தொண்டு. இவைகளும் இவைபோன்ற பிறசெயல்களும் நம் மரசினரால் பிரசைகளுக்குச் செய்யப்படும் நன்மைகளாகும்.

இந்திய வாசிகளுட் பெரும்பாலார் சுயராச்சியப் பற்றுடையராய் அரசினருடன் வாதாடிக்கொண்டும், மறியலிருந்துகொண்டும் வருகின்றனர். இதைக்கண்ட நம்மிலங்கை வாசிகளுட் சிலரும் சுயராய்ச்சியப் பற்றுடையவர்போல நடிக்கின்றார். தாழ்ந்த வகுப்பினரையும் தம்முடன் சோத்துச் சம்மந்தஞ்செய்து பிள்ளைகுட்டிகளைப்பெற்றுச் சனத்தொகையைப் பெருக்கி, சுயராச்சியம் பெறலாமென்று நினைக்கின்றார்; இது பகற்கனவேயன்றி வேறென்ன?

தேசங்கள்தோறும், நாடுகள் தோறும் இருக்கும் நாட்டாண்மைகாரர் பலர் அவ்வப்பகுதியிலுள்ள ஏழைகளுக்குத் தம்மைத் தலையாய்க்கொண்டு கருமங்களாற்றி வருவதைத் தலைமைக்காரர் அறியார்கள். ஏழைமக்கள் இவர்களாலடையும் கஷ்டங்களை அரசினர் அறிந்தால் இவ்வித செயல்களுக்கு உடன்படுவார்களா? இப்படிப்பட்ட மகான்கள் தாழ்ந்த வகுப்பினரைச் சகோதரராகக் கொள்ளவேண்டுமென்று சொல்வதுண்டேனில் அது பொய்யா? அன்றி மெய்யா? ஊர்கள்தோறும் இரகசிய ஆளுகை நடத்தி ஏழைமக்களை இம்சைசெய்தார்கர்லம் போகின்றது. ஆதலால் இனிமேற் சகோதரத்துவம் வந்தாலும் வரும். அடிமை வாழ்வும் தொலையக்கூடும்.

நீதியும் அனுதாபமும் காருண்ணியமும் நிறைந்த அரசினரால் ஆளப்படுவது கிடக்க, சுயராச்சிக்கதை பேசிக் கூட்டங் கூடுவோர்க்குப் பயித்தியம் என்று சொல்லாமல் விடுவது சரியாகுமா? சுயராச்சியம் என்றகதை எமக்கு விளங்கவில்லை. (வரும்)

---

## கிராமச்சங்கத் தலைவர்தெரிவு நியமனம்

சென்றமீ" நடைபெற்ற மேற்படி நியமனத்தில், அச்சுவேலிக் கோவிற்பற்றுக்கு முன் நியமனம் பெற்றுக் கடமைபார்த்து வந்தவரும், மேற்படி கோவிற்பற்று, செனன, மரண, விவாகப்பதிவுகாரரும், ஆயுள்வேத வைத்தியருமான ஸ்ரீமான் S யோன் இராஜா அவர்கள் நியமனம்பெற்றனர். சென்ற முறையும், இந்தமுறையும் இவரின் தெரிவு நியமனம் தேவசங்கற்பத்தின்படி நடைபெற்றமை யாவருக்கும் அதிசயத்தையும் மகிழ்ச்சியையும் கொடுப்பதாகும்.

புத்தூர்க் கோவிற்பற்றுக்கு, புதியவரும், கமாதிபதியுமாகிய ஸ்ரீமான். க. சிவகுரு அவர்கள் நியமனம்பெற்றனர். இந்நியமனம் இவர்க்குத் தகுதியுடைய தென்பதைக் குறித்து மகிழ்கின்றேம்.

எங்கள் மயிலிட்டிக் கோவிற்பற்றுக்கு, பழையவரான ஆசிரியர் ஸ்ரீமான். சி. சுவாமிநாதனவர்கள் நியமனம்பெற்றனர்.

## சொற்பிறப்பு-ஒப்பியல் தமிழ் அகராதி

முதலாம்பகுதி.

இப்பெயரிய அகராதியொன்று நமது பார்வைக்குக் கிடைத்தது. இஃது, ஆராய்ச்சிவல்லுநரும், பல நூற்பரிசோதகரும், பலபாஷா பண்டிதரும், பெருந் தமிழபிமானியும், கத்தோலிக்கமத குருவரும் ஆகிய வண. சுவாமி ஞானப்பிரகாசர் அவர்களால் இயற்றப்பெற்றுள்ளது. இந்நூலையாக்குதற்கண் அடிகள் சுவாமியவர்கள் மிகுந்த சிரமமெடுத்துள்ளாரென்பது இந்நூலை வாசிப்பார்க்கு நன்கு போதரும். தமிழ்மொழிக்கு இந்நூல் ஓர் சிறந்த அணிகலனுகத் திகழுமென்பதில் எட்டுணையும் ஐயமில்லை. அகத்தியர் தொல்காப்பியர் முதலிய பண்டைய தமிழ்மொழி அறிஞர்கள் தாமும் இத்தகைய சொற்பிறப்பு ஆராய்ச்சியில் ஈடுபட்டிலர். மேலைத்தேயப்பாஷைகளில் நூலாசிரியர் பெற்றுள்ள பயிற்சியே இவர் இந்நூல் செய்தற்கு மிகத் துணையா யிருந்ததெனலாம். பண்டொருகாலம் தமிழ்மொழி யுலகெங்கணும் பரவியிருந்ததென்பதை இவ்வகராதி தெள்ளிதின் விளக்குகின்றது. இந்நூல் தமிழ் கற்பார்க்கு நவீனவழிகாட்டியாயமைந்துள்ளது. பெரும்பாலும் ஆங்கிலத்தி லெழுதப்பட்டிருப்பதால் மேலைத்தேயத்தவரும் படித்துணரும் பான்மையது. தமிழை வளம்படுத்துவதையே பெருநோக்கமாகக்கொண்ட சுவாமிகளது அகராதியைத் தமிழுலகம் கொண்டாடுமென்பது எமது உள்ளக்கிடக்கையாகும். இவ்வகராதி தமிழகத்தாரை ஆக்கியோன்மாட்டுக் கடப்பாடுடையராக்கிவிட்டது. எமக்கனுப்பிய பிரதிக்காக ஆக்கியோனுக்கு மனமார்ந்தநன்றி கூறுகின்றேம்.

இதன் விலை ரூபா 2.

---

## அச்சுவேலி உடையார்

இக்கோவிற்பற்று உடையாராகவிருக்கும் திரு. வ. சின்னப்பரவர்கள், வலிகாமம் வடக்குக் கிழக்கு மணியகாரனிடமாகச் சென்ற சிலநாட்கள் தொடங்கிக் கடமை பார்த்து வருகின்றனரென அறிகின்றேம்.

---

## காலநிலை

சென்றகிழமை நல்ல மழை வருஷித்தது. காற்று வீசியதினால் சில இடங்களில் வாழை முருங்கை முதலியன முரிந்து சேதமுற்றன. இதுவுமன்றி விளைவுற்று வெட்டுப்படாதிருந்த பனிச்சாமையும் புகையிலைப்பயிரும் நட்டமாயின. வெப்பம் சற்றுக்குறைவு.

---

கிராமச்சங்கத் தலைவர்கள் தங்கள் கடமைகளை நேர்மையுடன் நடத்தி ஊரவர்களுக்கு நன்மை செய்து வரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேம். ஒருவரின் பயத்துக்காகவும், நயத்துக்காகவும், முகத்துக்காகவும் கடமைபார்ப்பதுண்டேனில், அது சனோபகாரத்துக் குரியதாகமாட்டா தென்பது உண்மையாம்.

---

அறிவுடையா ராவ தறிவா ரறிவிலா ரஃதறி கல்லா தவர்.

## கலியாண நாடகம்

(காளிதாசன் எழுதுவது)

### காட்சி 1.

### நாடகபாத்திரம்

இராமசாமி, பெண் பொன்னுச்சி, மகள் சுந்தரி. இராமசாமியின் தாய் பாறுவதி, இராமசாமியின் சகலன் குட்டியர். மருமகன் சுந்தரன்.

இடம் கலட்டித்தெருவீடு நம். 3.

நேரம் அமாவாசையிலன்றிரவு 9 மணி.

பொன். (கணவனுக்கு) நீங்கள் என்ன கண் தூங்கிறீர்களா.

இரா. இல்லை இல்லை. இன்றைக்கு அமாவாசை விரதமல்லவா. கொஞ்சம் இறம்ப சாப்பிட்டுவிட்டேன்.

பொன். ஏன் இட்டுமுட்டாயிருக்கிறதா.

இரா. ஒருக்காலும் இப்படி இன்பமான வார்த்தைகளை உன் வாயினின்றும் கேட்கவில்லையே. இன்றைக்குஎன்னமோ உன் முகம் சந்தோஷமாய்த்தானிருக்கிறது.

பொன். அதெல்லாமிருக்கட்டும். நீங்கள் தங்கச்சி "சுந்தரி"யினுடைய அலுவலைப்பற்றிக் கொஞ்சமும் யோசனையில்லாம லிருக்கிறீர்களே. எப்போதான் இதுகளெல்லாம் பார்த்துவைக்கப்போகிறீர்களோ தெரியவில்லை.

இரா. என்ன அலுவலென்றியே, தெளிவாகக் கொஞ்சம் சொல் பாரப்போம்.

பொன். ஓ! உங்களுக்கேன் அந்தச் சிந்தனை வருகிறது. நல்லாய்ச் சாப்பிட்டுவிட்டு உறங்குகிறதுதானே தொழில்.

இரா. கண்ணே கோபித்துக்கொள்ளாதே. விஷயத்தை வெளியாகச் சொல்.

பொன். அல்ல, பிள்ளைக்கும் வயசு 12 ஆச்சுது. பெரியபிள்ளையாயினதும் இப்போ வருஷம் ஒன்ரரை சென்றுவிட்டது. எங்கேயாயினும் ஒரு மாப்பிள்ளையைப் பார்க்கவேண்டியது தகப்பனது கடமையல்லவா.

இரா. இதுக்கா இவ்வளவு சோய் எடுத்தாய். இருக்கட்டும். காலம்போகவில்லையே. நாங்கள் பிள்ளையை ஒரு கல்லூரியில்விட்டு மேற்படிப்புப் படிப்பிப்போம். நாலைந்துவருஷத்துக்குப் படிக்கட்டும். அதன் பிறகு காலம்நேரம் நல்லாயிருக்கிறபொழுது கலியாண விஷயத்தைப்பற்றி ஆலோசிப்போம்.

பொன். கிழண்டினதற்கு பின்தானோ கலியாணத்தைப்பற்றி யோசிக்கிறது. சரி, யோசித்து எத்தனை ஆண்டிற்குப்பின் கலியாணம் செய்துவைக்கிறது.

(பாறுவதி வருகிறு)

பாறுவதி. (மகனைப்பார்த்து) என்னடா தம்பி இன்றைக்கு அமாவாசையில் இரண்டுபேரும் தர்க்கம்பண்ணுகிறீர்கள்.

இரா. நீயும் கேட்டால் சிரிக்கப்போருய். என்றாலும் சொல்லுகிறேன். மருமகள்சொல்லுகிறு எங்களுடைய சுந்தரிக்கு எங்கேயாவதுசரி ஒரு கலியாணம் செய்துவைக்கவேணுமாம்.

பாறு. தம்பி. நானும் உனக்கு இதைப்பற்றிச் சொல்லவேணுமென்று கனநாளாய் எண்ணிக்கொண்டிருக்கிறேன். என்னுடைய கண்ணிற்பாவை கிடக்கிறபொழுதே ஒன்று செய்துவைக்கத்தான்வேணும்.

இரா. உன்னுடைய எண்ணமுமப்படித்தானோ. சரி எங்கே வசதியாயிருக்குது.

பாறு. என்னுடைய மூத்த மகனுடைய மகன் ஒருதன் 6ம்-தரம் இங்கிலிசு பாசுப்பண்ணிப்போட்டான். வேறை எங்கை செய்கிறது அவனுக்குத்தான் செய்யவேணும்.

இரா. அது சரிதான். அவனுக்கு வயசு என்ன.

பாறு. என் இப்ப அவனுக்கும் இந்த ஆவணிக்கு 15 ஆய் விடும்.

இரா. ஒரு முயர்சியுமில்லாத சிறு பையன்களுக்கெல்லாம் என்னகலியாணம். எங்கேயென்றாலும்பார்த்து ஒரு உத்தியோகஞய்த்தான் எடுக்கவேணும்.

பாறு. எங்களுடைய இனத்திற்குள் உத்தியோகம் எங்கேயிருக்குது.

இரா. அப்படியில்லாவிட்டால் வெளியில்ஒருமாப்பிள்ளையைஎடுக்கிறது.

பொன். தாயும் மகனுமாய் இப்பொழுது ஒரு மாப்பிள்ளையைக் கொண்டுவந்து விடுவீர்கள்போலிருக்கிறது. பிள்ளை சுந்தரியினுடையவிருப்பம் எப்படியென்றல்லவோ பார்க்கவேண்டும்.

பாறு. நாங்கள் சொல்லுகிறபடி சுந்தரி செய்யாளா? நீங்கள் எதுவோ இந்தநாளில் பிளானிலை நிற்கிறீர்கள் போலிருக்குது.

பொன். அப்படியல்ல பெண்பிள்ளையின் விருப்பமும் கேட்டுத்தான் ஒரு விவாகம் ஒழுங்குசெய்ய வேண்டும். அப்படியல்லாத படியால்தான் நானும் இப்படியிருக்கிறேன்.

பாறு. இது என்ன ஒரு புதுமாதிரி ஆரேன் கேட்டாலும் சிரிக்கப் போருர்கள்.

இரா. ஆச்சி காலம் இப்பொழுது மாறிக்கொண்டது மருமகள் சொனனதைத் தட்டாதே. ஒரு ஞாயத்திற்கு அதுவும் சரிதான்.

பாறு. நீங்கள் உங்கள் விருப்பம்போலச் செய்யுங்கள். (வெளியில் பாறுவதி செல்கிறுள்.)

பொன். நாளைக்குச் சுந்தரி பள்ளிக்கூடத்தினின்றும் வந்தபிறகு கேட்டு அவளுடைய விருப்பத்திற்கு எற்றபடி ஒரு கணவனை இந்த ஐப்பசிக்கு முற்றிப் பேசி ஒழுங்குசெய்யவேண்டும். நேரம் 12-30 நித்திரைக்குச் செல்கிறுர்கள். (வரும்)

## முன்னேஸ்வரம் வடிவாம்பிகாசமேத முன்னநாதஸ்வாமி மகோற்சவம்.

இலங்கையிலுள்ள பாடல்பெற்ற ஸ்தலங்களுள் ஒன்ருகும் மேற்படி ஆலயத்தில் நிகழும் வெகுதானியவூ ஆடி மீ உகூ-ந்உ (13-8-38) சனிக்கிழமை துவஜாரோகணமாகி உற்சவங்கள் நடைபெறும்.

### விசேஷ குறிப்பு

பிக்ஷாடனர் திருவிழா-ஆவணி மீ உ0-ந்உ (5-9-38) திங்கட்கிழமை.

நடேசர் திருவிழா-ஆவணிமீ உக-ந்உ (6-9-38) செவ்வாய்க்கிழமை.

வேட்டைத் திருவிழா-ஆவணிமீ உஉ ந்உ (7-9-38) புதன் கிழமை.

தேர்த் திருவிழா-ஆவணி மீ உங-ந்உ (8-9-38) வியாழக்கிழமை.

தீர்த்தத் திருவிழா-ஆவணிமீ உச-ந்உ (9-9-38) வெள்ளிக்கிழமை 10 மணி வரையில் மாயவனாற்றில் தீர்த்தங் கொடுத்தல் 2 மணிவரை வடிவழகி அம்மன் தோட்டத்தில் அபிஷேக ஆராதனை முதலியனவும் பிறகொண்டாட்டங்களும் நடைபெறுமென்று மேற்படி தேவஸ்தான ஆதீனபரிபாலன கர்த்தாவாகிய பிரமஸ்ரீ. மூ. சோமாஸ்கந்தக் குருக்கள் அவர்கள் தெரிவிக்கின்றுர்.

☞ சலாபம் றெயில்வே ஸ்டேசனிலிருந்து கிழக்கே ஒருமைல் தூரத்தில் முன்னேஸ்வர ஸ்தலம் இருக்கிறது.

## தீண்டாமையும் ஆலயப்பிரவேசமும்

மீசாலை, வி. நடராஜன்

(முன்தொடர்ச்சி)

இனிமேல் நாம் தாராளமாக நடந்துகொள்வதற்கு வழி நம் காந்தி முதலியோரால் கிடைத்திருக்கின்றது. நாம் இனி விவாகாதி கருமங்களில் முறைதலையொன்றும் பார்க்கவேண்டியதில்லை. வேண்டுமானுல் சகோதரர்கள் ஒருவரை ஒருவர் மணம்முடித்துக் கொள்ளலாம். கள்ளுங்குடிக்கலாம், கொலைசெய்து முண்ணலாம். ஏன்? புண்ணியபாவங்களையும்' சுவர்க்க நரகங்களையும், கடவுளையும் நாம் நம்புவதற்கிடமில்லாமற் போய்விட்டபடியால்.

தற்காலத்து நவீன நாகரீகக் கல்விகற்று நவீன நாகரீகச் சூழலிலகப்பட்ட நம் வாலிப ஞானிகள் பதினெண் புராணங்களையும் உலோகோபகாரமாக உபதேசித்தருளிய சூதமுனிவரையும் அவர்போல்வாரையும் ஆரணி குப்புச்சாமி முதலியார் வடுவூர் துரைசாமி ஐயங்கார் முதலியவர்கள் போன்ற நாவலாசிரியராக்கிவிட்டார்கள். பதினெண் புராணங்களையும் சூதரென்னும் மதியூகியாலாக்கப்பட்ட நாவல்கள் (கட்டுக்கதைகள்) ஆக்கிவிட்டார்கள். இவற்றைத் தற்காலத்துள்ள நம் வாலிபஞானிகளின் சாமார்த்திய மென்போமா? அன்றிக் கலியின் சாமார்த்திய மென்போமா? என்னென்போம்? இச்சந்தர்ப்பத்தில், புராணங்களிற் கூறப்படும் சில விஷயங்களை நாம் நம்புவதற்கிடமின்மையால் ஆராய்ச்சி மூலம் அவற்றை யொழிக்கவேண்டுந்தானே எனச் சிலர் கேட்கலாம். அதுபோலவே வேதசிவாகமங்களிற் கூறப்படும் தீண்டாமை முதலியனவும் நியாயவிரோதமாயிருக்கையால் அதனையும் ஆராய்ச்சி மூலம் ஒழிக்கலாந்தானே என இன்னுஞ்சிலர் கேட்கலாம். இவைகளை ஊன்றியோசித்துப் பார்த்தாற் சரியான கேள்விகளல்ல. புராணங்களிற் கூறப்படும் சில சம்பவங்கள் ஒருவேளை நடவாதனவாயிருந்தாலும் அவை எதைச் சாதித்தற்குக் கூறப்பட்டன என்பதையே நாம்அவதானித்தல்வேண்டும். அவற்ருற் சாதிக்கப்படும் விஷயம் நம்மைத் தீநெறியினீக்கி நன்னெறியிலுய்ப்பதாயே இருக்கும். இச்சந்தர்ப்பத்தில் அவை பொய்யெனப்படுதற்குரியனவோ என்பதைத்தான் கூர்ந்துநோக்கல் வேண்டும். எச்சாதியினராலும் எச்சமயத்தவராலும் பொய்யாமொழியெனப் புகழ்ந்து மதிக்கப்படும் உத்தரவேதமாகிய திருக்குறள் யாதுகூறுகின்றது. "பொய்மையும் வாய்மையிடத்த புரைதீர்ந்த, நன்மைபயக்குமெனின்" என்றன்றே கூறுகின்றது. இதனுலென்ன பெறப்படுகின்றது? உண்மையான சமயபத்தன் சமயநூல்களிற் கூறப்பட்ட விதிவிலக்குகளின் உண்மையைக் கிளறியாராயத் தெண்டிக்கவேண்டியதில்லை என்பதும், அவற்றை நம்பி அனுட்டிக்கவேண்டுமென்பதும் பெறப்படுகின்றது. இதுவே முன்னுள்ள பெரியாரெல்லாருடைய கருத்துமாகும். அதற்காதாரமாகச் சிறிது காலத்தின் முன்னிருந்த—பலராலும் நன்குமதிக்கப்பட்ட ஸ்ரீ விவேகானந்த சுவாமிகளின் குருவாய ஸ்ரீ இராமகிருஷ்ணபரமஹம்சரவர்களின் சில உபதேச வாக்கியங்களைப் பிரமாணமாகக் காட்டுகின்றேன். தற்காலத்து வாலிபர்களிற் பலர் ஸ்ரீ விவேகானந்த சுவாமிகளையும் அவர் குருவாகிய ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரவர்களையும் அவதார புருஷர்களெனமதித்து அவர்கள்பேரால் பொது ஸ்தாபனங்களையுமமைத்து நடாத்தி வருகின்றமையாற்ருன் அவர்வாக்கைப் பிரமாணமாகக் காட்டுகின்றேன். ஒருவேளை மற்றையோர் அவர்வாக்கைப் பிரமாணமாக ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் ஷெடியார்களின் தாபனத்தைச் சேர்ந்தவர்களாவது அவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டுந்தானே என்ற எண்ணத்தாற்ருன் அவற்றைக் காட்டத் துணிகின்றேன். சமயானுட்டான விஷயமாயும் சாதியாசார விஷயமாயும் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரவர்கள் திருவாய் மலர்ந்தருளிய உபதேசவாக்குகள் வருமாறு.

"இக்காலத்து ஜனங்கள் எவ்விஷயத்திலும் சாரத்தையே கொள்ளவேண்டும்" என்கிருர்கள் அவர்கள் மதத்தின் முக்கியாம்சத்தை ஏற்றுக்கொள்வார்களேயன்றி அமுக்கியாம்சங்களாகிய கர்மம் சடங்கு சிஷ்டாசாரம் சம்பிரதாயம் முதலியவற்றைக் கவனிப்பதில்லை. நெல்மணியில் முளைத்துப் பயிராவதற்கு முக்கியமான அம்சம் முளையே என்றும், அதை மூடியிருக்கும் உமியும் பதரும் பயனற்றதென்று கருதப்படினும், உமியைநீக்கி அரிசியை மாத்திரம் நிலத்தில் நட்டால் அது முளைத்துக் கதிர்வாங்கிப் பலனளியாது. ஆகையால் நெற்பயிர் வேண்டுபவன் உமியுடன் கூடிய நெல்மணியையே விதைத்தல் வேண்டும். ஆனல் ஒருவன் அதிலுள்ள அரிசியை எடுக்கவேண்டுமாயின் அப்பொழுது உமியை நீக்கவேண்டும். அதுபோலவே மதமானது வளர்ந்து செழித்தோங்கியிருப்பதற்குக் கர்மானுஷ்டானங்களும் ஆசாரங்களும் இன்றியமையாதவை. அவை சத்தியத்தின் பீஜங்களை அடக்கிக்கொண்டிருக்கும் பாத்திரங்களாயிருப்பதால் பிரதி மனிதனும் உண்மைநிலையை உணரும்வரையில் அக்கருமங்களை அவசியமாய் அனுஷ்டிக்க வேண்டும். எவ்விஷயத்திலும் உட்கருத்தையும் அதுமேற் கொண்டிருக்கும் வெளிவடிவத்தையும் கௌரவிக்கவேண்டும். ப்ரஹ்மஞானம் கைகூடும் பொழுது சகலபந்தங்களும் தாமாகவே விழுந்துவிடுகின்றன. அப்பொழுது பிராஹ்மணனுக்[illegible] சூத்திரனுக்கும், உயர்குலத்தானுக்கும் இழிகுலத்தானுக்கும் பேதமில்லை. அங்கிலையிலே ஜாதியின் சின்னமாகிய பூணூல் தானகவே விழுந்துவிடுகின்றது. ஆனல் ஒருவன் பேதமும் வித்தியாசமும் பாராட்டிக்கொண்டிருக்கும் வரையில் அதை வலுவிலே எடுத்தெறிந்துவிடக்கூடாது.

(தொடரும்)

அஞ்சுவ தஞ்சாமை பேதைமை யஞ்சுவ தஞ்சலறிவார் தொழில்.

# ஸ்ரீ ரமண மஹர்ஷிகள் சரித்திரம்

திரு. G. ஷண்முகம் B. A. எழுதியது
நவிண்டில்-பிரமஸ்ரீ சு. சி. குருபாரதிகள் கேள்விப்படி.

(முன்தொடர்ச்சி)

## இவரது நூல்கள்

I. பகவான் பலரது வேண்டுகோளுக்கிணங்கி லோகோபகாரமாகப் பல சிறு கிரந்தங்களை அருளியுள்ளார். அவைகள் யாவும் 'சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல்' என்ற அழகுக்கோ ரிலக்காயிருப்பதோடு வேதாந்த பரிபாஷைகளைக் கூடியவரை அகற்றிச் சாதாரண ஜனங்களும் விஷயங்களை எளிதில் உணர ஏதுவாயிருக்கின்றன. மஹர்ஷிகள் இயற்றிய நூல்களாவன:-

1. அருணாசல ஸ்துதி பஞ்சகம்:— இது பகவான் நானற்ற அந்நிலை பெற்றபின், அருணாசலேசர் மீது துதியாகப் பாடிய ஐந்து நூல்களின் தொகுதியாகும். அருணாசல அக்ஷரமணமாலை, அருணாசல நவமணிமாலை, அருணாசல பதிகம், அருணாசல அஷ்டகம், அருணாசல பஞ்சரத்நம் என்பன இத்தொகுதியில் அடங்கியவை.

2. உபதேச உந்தியார்:— இது பகவான் சமீபத்தில் வசித்துவரும் பக்தர் பாரத்வாஜ முகவைக் கண்ண முருகனார் உலகம் கர்மபாசத்தினின்றும் உய்யும்படியான முறையை அருளும்படி பகவானை வேண்ட, அதற்குப் பகவானும் இசைந்து 30 பாக்களால் அருளிய உபதேசம். இதில் கர்மம், பக்தி, யோகம், ஞானம் ஆகிய இந்நான்கு மார்க்கங்களும் முறையே சுருங்கச்சொல்லி மிகத் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. ஸ்வாமிகள், தமிழிலுள்ள மேற்படி உந்தியாரை ஆசிரமத்திற்கு அடிக்கடி போக்குவரத்துள்ள நெல்லூர் திரு. ராமயோகிகளது வேண்டுகோளுக்கிணங்கி முதலில் தெலுங்கிலும் மற்றும் சில பக்தர்கள் வேண்டுகோளுக்கிணங்கிப் பின்பு சம்ஸ்கிருதத்திலும் மலையாளத்திலும் முறையே செய்தருளினர்.

3. உள்ளது நாற்பது:— இதுவும் மேற்படி மு. க. முருகனார் வேண்டுகோளுக்கிணங்கி பகவான் பெரிதும் மனமுவந்து ஞானவிசார மார்க்கத்தை யாவரும் தெள்ளிதிலுணரும்பொருட்டு, உள்ளது நாற்பது என்ற பெயருடன் 40 வெண்பாக்களால் ஒரு திவ்ய கிரந்தத்தை அருளினர். இதனுடன் முப்பது செய்யுட்களால் தொகுக்கப்பெற்ற அனுபந்தம் ஒன்றும் சேர்ந்திருக்கிறது. இதனுள் ஸத் சங்கத்தின் பெருமையை, ஹ்ருதய ஸ்தான இருப்பு, ஆத்ம ஞான வியல்பு முதலியன விளக்கப்பட்டுள்ளன.

இந்நூல்களைத் தவிர அப்பளப்பாட்டு, ஆன்ம வித்தை என்னும் இரண்டு கீர்த்தனங்கள் வாயிலாகவும் உண்மைத்தத்துவத்தை விளக்கியுள்ளார்.

II. மஹர்ஷிகள் சில மொழிபெயர்ப்பு நூல்களும் ஆக்கியுள்ளார். வையாவன:—

(1) விவேக சூடாமணி:— ஜகத்குரு சங்கராசாரியர் வடமொழியில் அருளிய விவேக சூடாமணி என்ற அத்வைத கிரந்தத்தையும் திருக்கு திருசிய விவேகத்தையும், தமிழ்நாட்டவர் யாவரும் அறியும் பொருட்டு பகவான் தமிழில் வசனமாக மொழிபெயர்த்தருளினர். தக்ஷிணாமூர்த்தி தோத்திரம், அத்தாமலகம், குரு ஸ்துதி இவைகளும் பகவானால் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

(2) தேவிகாலோத்தரம்-ஞானாசாரவிசார படலம்:— இதுவும் மஹர்ஷிகள் சம்ஸ்கிருதத்திலுள்ள நூலை சுலோகத்திற்கொரு வெண்பாவாகத் தமிழில் மொழிபெயர்த்தருளியது.

(3) சர்வஞானோத்தரம் — ஆன்மசாட்சாத்காரப்பிரகரணம்:— என்ற சம்ஸ்கிருத நூலை, பகவான் சமீபத்தில் 62 வெண்பாக்களாக தமிழில் மொழிபெயர்த்துள்ளார். இதுவும் விசாரமார்க்கத்தைப்பற்றிக் கூறுகிறது.

III. ரமணஸ்வாமிகளிடம் மிக்க அன்புவாய்ந்த சில பக்த சிரோமணிகள் முயற்சியால் அவர் உபதேசங்களடங்கிய பல நூல்கள் வெளிவரலாயின.

(1) நான்யார்:— இது அன்பர் திரு. சிவப்பிரகாசம்பிள்ளை என்பவரால் பகவானிடமிருந்து சம்பாஷணை வாயிலாக கிரகிக்கப்பட்டது. விசாரமார்க்கத்தைப்பற்றிச் சொல்வது. வக்கீல் திரு. சேஷையர் என்னும் ரமணபக்தர் இதனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்.

2 ரமணகீதை:— பதினெட்டு அத்தியாயங்களடங்கிய இந்நூல் பகவானின் சிறந்த பக்தரான திரு. காவிய கண்ட கணபதி சாஸ்திரிகளால் வடமொழியில் இயற்றப்பட்டது. தாமும் தெய்வராதன், கார்ஷ்ணி, யோகநாதன், கபாலி, வைதர்ப்பன் முதலிய சிஷ்யர்களும் பகவானிடமிருந்து சம்பாஷணை வாயிலாகக் கிரகித்த விஷயங்களை, மேற்படி சாஸ்திரிகள் முந்நூறு சுலோகங்களில் தொகுத்தார். வடமொழி அறியாத தமிழர் பலருக்கும் பெரிதும் பயன்படுமாறு பக்தர் திரு. நரசிம்மய்யா என்பவர் இதற்குத் தமிழில் தாற்பரியம் எழுதியுள்ளார். இதில் ஆத்மநிஷ்டை, பக்தி, யோகம், ஞானம், ஞானிகளின் இயல்பு, ஹ்ருதயமும் மனமும், ஹ்ருதயகிரந்தி, மாயை, மனமடக்கும் முறைகள், ஜீவன்முத்தி, முத்தலக்ஷணம் முதலிய பற்பல விஷயங்களும் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. இந்நூலின் இறுதியில் பகவானருளிய அருணாசல பஞ்சரத்நமும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

3. ஸத்தர்சனம்:— மேற்படி பக்தர் திரு. கணபதிமுனி பகவான் அருளிய உள்ளதுநாற்பதை வடமொழியில் மொழிபெயர்த்து 'ஸத்தர்சனம்' என்ற நாமத்துடன் வெளியிட்டார். அதற்கு அன்பர் திரு. கபாலி சாஸ்திரிகள் ஸம்ஸ்கிருதத்திலே பாஷ்யம் எழுதினர். அந்த 'ஸத்தர்சன' பாஷ்யத்தை யவரே ஆங்கிலத்தும், திரு. விச்வநாத ஐயர் என்னும் ரமணபக்தர் தமிழிலும் மொழிபெயர்த்துள்ளார்.

4. விசாரசங்கிரக வினாவிடை:— பகவான் மௌனமாய் மலையின்கண் வீற்றிருக்குங்கால், அவ்வூரில் வசித்து வந்த திரு. ஜீ. சேஷையர் என்பவர் அடிக்கடி வந்து பகவானைத் தரிசித்துச் செல்வது வழக்கம். மேற்படியார் வேண்டுகோளுக்குப் பெரிதும் மனமிரங்கி, அவர் கேட்ட கேள்விகட்கெல்லாம் விரிவான பதில்கள் எழுதித் தந்தருளினர். மகர்ஷிகளிடம் அன்பு வாய்ந்த திரு. நடனானந்தர் என்னும் பக்தர் இவைகளை யெல்லாம் திரட்டி ஒழுங்காகத் தொகுத்து, 'விசார சங்கிரகவினாவிடை' என்ற பெயருடன் வெளியிட்டார். ராஜயோகம், ஞானயோகம், விசாரப் பெருமை, பிரணவத்தியானம் முதலியன இதில் பிரஸ்தாபிக்கப்பட்ட விஷயங்களாகும்.

5. உபதேசமஞ்சரி:— இதுவும் மேற்படி திரு. நடனானந்தர் அவர்களால் தொகுக்கப்பெற்றது. சமீபகாலத்தில் மேற்படி பக்தர் பகவான் திருவாக்கினின்றும் கிரகித்த விஷயங்களைத் திரட்டி முறையே உபதேசப் பிரகரணம், அப்பியாசப் பிரகரணம், அநுபவப் பிரகரணம், ஆரூடப் பிரகரணம் என நான்கு பிரிவுகளாக வகுத்து 'உபதேசமஞ்சரி' யென்ற நாமத்துடன் வெளியிட்டார்.

6. ஆங்கில உபதேசசாரம்:— சேலத்தில் பிரபல வக்கீலாயிருந்து தற்காலம் வானப்பிரஸ்தாசிரமத்தை மேற்கொண்டு ஆசிரம சமீபத்திலே வசித்துவரும் ஸ்ரீமான் பி. வி. நரசிம்மய்யர், பகவான் அருளிய உபதேச உந்தியாரை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்.

7. ஆங்கில ரமணசரித்திரம்:— மேற்படி திரு. பி. வி. நரசிம்ம ஸ்வாமிகள் பகவானது சரித்திரத்தையும் உபதேசங்களையும் Self-Realisation or The Life & Teachings of Ramana Maharshi என்ற பெயருடன் ஆங்கிலத்தில் ஒரு புத்தகமும் விரிவாக எழுதியுள்ளார்.

8. ஆங்கில உள்ளது நாற்பதும் (Reality) ஆங்கில உபதேசசாரம் விரிவுரையும்;--- ரமணதாச வக்கில் திரு. சேஷையர் பகவான் அருளிய உள்ளது நாற்பதை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து அதற்கு வியாக்யானமும் எழுதியுள்ளார். 1931-ம் வருடம் உபதேசசாரத்திற்கு இந்த ரமணதாசர் ஒரு அழகிய விரிவுரை எழுதியிருக்கிறார். இவை பகவான் விசார மார்க்கத்தை எளிதில்விளக்கிக்காட்டுகின்றன

(9) ஸ்ரீ ரமணவிஜயம்.—சுவாமி சுத்தானந்த பாரதியார் ஓர் தெய்விக கவியரசர். ரமணபகவானிடம் அன்புமிக்கவர். பகவான் திவ்யசரிதையையும் அருண்மொழிகளையும் விரிவாய் இனிய செந்தமிழ் நடையில் எழுதியுள்ளார். பகவானைப்பற்றிய விஷயங்கள் யாவற்றையும் விரிவாய் இந்நூலில் காணலாம்.

### முடிவுரை

"சத்திணக் கத்திஞற்
சார்பகலும் சார்பகலச்
சித்தத்தின் சார்பு சிதையுமே
—சித்தச்சார்
பற்று மலைவிலதி லற்றார்ஜீ
வன்முத்தி
பெற்று ரவிணக்கம் பேண்"
(உள்ளது நாற்பது-- அனுபந்தம்)

என்றபடி பெரியோர்களின் பெருமையை ஒவ்வொருவரும் உள்ளபடி உணர்ந்து அன்னாரிணக்கம்பெற்று உய்யவேண்டியது மானிட வாழ்க்கையின் சிறந்த பயனாகும். மேலும்

"ஜீவன்முக்தனைச்சேவித்தோர்
சிவனய னெடுமாலான
மூவரு மகிழ நோன்பு
முழுவதுஞ் செய்து ஜன்ம
பாவன மானா ரென்று
பலமறை முழங்கும்..." என்ற

கைவல்யவாக்கிய ரீதியாய் ஜீவன்முக்தரான ஸ்ரீ ரமண மஹர்ஷிகளைத் தரிசித்து அன்னார் காட்டிய நெறிநின்று ஸாயுஜ்ய பதவியடைய எல்லாம்வல்ல இறைவன் நமக்கு அருள்புரிவாராக-

ரமணசரித்திரச்சுருக்கம் முற்றிற்று

# பெரியபுராணப் பெரியோர்

(முன்தொடர்ச்சி)

கண்களிலிருந்து கண்ணீர்மழைபோல வாரவும் சிவபெருமானுடைய பாதங்களில் பரவையார் விழுந்துகொண்டு தேவரீர் ஓர் உருவெடுத்துக்கொண்டு ஒருவருக்காக அங்குமிங்குமாக உழல்வீராகில் யான் இசையாதிருக்க முடியுமோ என்று கூறினர். பின் சிவபெருமான் உடனே வன்தொண்டரின் இடத்துக்குப் போனர். அப்போது பரவையார் என்ன சொன்னரோ என்று அப்போது மனமழிந்து கொண்டிருக்கும் வன்தொண்டர் சிவபெருமானைக் கண்டவுடனே சந்தோஷமடைந்து பரவையார் என்ன சொன்னரென்று கேட்கச் சிவபெருமான் பரவையார் சம்மதித்ததாகவும் அங்கு போகும்படியாகக் கூறினர், "மந்தமும் வீடு நீரருள் செய்யும்படி செய்தீர்—எந்தைபிரானே யென்னினியென் பாலிடரென்றுர்" என்று வன்தொண்டர் கூறினர். பின் வன்தொண்டர் வீதிவிடங்கப் பெருமானைப் போய் வணங்கினர். பின் வன்தொண்டர் பரவையாருடைய வீட்டுக்கு அதிக சிறப்புடன் பரிசனங்கள் வணங்கப் பரவையாருடைய வீட்டுக்குள் சென்றுர். இருவரும் "ஒருவருள் ஒருவர் மேவு நிலைமையிலுயிரொன்றுனர்" என்று பொருந்தும்படியாக வாழ்ந்தார்கள். பரவையாரிடத்துச் சிவபெருமானைத் தூதாக ஓர் பெண் விஷயத்திற்காக விடுவதற்கு ஒருவர்இப்படிச்செய்துவிட்டாரென்றுஏயர்க்கோன் கலிக்காமநாயனர் மனமகிழ்ந்தார். அதிக கோபம்கொண்டார். சிவபெருமான் சுந்தரமூர்த்திசுவாமிகளையும் ஏயர்கோன் கலிக்காம நாயனரையும் ஒருமைப்பட வேண்டி ஏயர் கோன் கலிக்காம நாயனருக்கு சூலைநோய் உண்டாக்கினர். அச்சூலைநோயானது அவருடைய உடலைக் குடைந்து வருத்த சிவபெருமான் கனவில் தோன்றி வன்தொண்டர் தீர்த்தாலன்றி அந்நோய் நீங்காதென்று கூறினர்.ஏயர் கோன் அதிக துக்கமுற்று "என்னை யிருஞ் சாலைவம்பென ஆண்டுகொண்டாமெனுருவனே தீர்ப்பான் வந்து" என்று கூற சிவபெருமான் நீங்கி சுந்தரமூர்த்திபிடம் போய் கலிக்காமருக்குப் பொருந்திய நோயைத் தீர்க்கும்படியாக ஆஞ்ஞாபித்தார். வன்தொண்டர் எனது சூலைநோயைத் தீர்க்கமுன் என்னுடைய உயிரை விடுவதே முறையென்று கருதித் தமது உடைவாளினல் மார்பிற் குத்தினர். அப்பொழுது உயிரும் சூலையும் நீங்கியது. வன்தொண்டர் வருகிறரென்பதைக் கேட்ட கலிக்காமரின் மனைவியார், ஒருவரையும் அழாது தடுத்துத் தூபம் தீபம் ஏந்திச் சுந்தரமூர்த்தி சுவாமிகளை எதிர்கொண்டு அழைத்துச்சென்று ஆசனத்திருத்தி அர்ச்சனை வழிபாடுகள் செய்து நின்றுர். அவ்வமயத்தில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஏயர்கோனர் எங்கு இருக்கிறரெனக் கேட்டார். மனைவியார் அவர் உள்ளே நித்திரை செய்கிறரென்று சொல்ல நம்பி அங்கு சென்றுர். ஏயர்கோன் ஆவிசோர்ந்து இரத்தத்துடன் கிடத்தலைக்கண்ட நம்பி தாமும் அப்படியே இறக்கக்கருதி வாளை எடுத்து அரியும்பொழுது ஏயர்கோன், திருவருளினல் உயிர்பெற்றெழுந்து வன்தொண்டரின் வாளைப் பிடித்தார். ஏயர்கோன் நம்பியுடைய பாதங்களில் விழுந்து வணங்கினர். அப்பொழுது தேவர்கள் பூமாரி சொரிந்தார்கள். இருவரும் ஒருவரை ஒருவர் கட்டித்தழுவி நண்பர்களானர்கள். இருவரும் திருப்புன்கூருக்குச் சென்று சிவபெருமானை வணங்கினர்கள். அப்பொழுது வன்தொண்டர் "அந்தணாளன் அடைக்கலம் புகுதல்" என்ற சொற்களை முதலாகவுடைய தேவாரத் திருப்பதிகத்தைப் பாடினர். இருவரும் திருவாரூர்க்குச்சென்று தியாகராசப் பெருமானைக் கும்பிட்டார்கள். ஏயர்கோன் தமக்கேற்ற தொண்டு செய்து சிவபதம் அடைந்தார்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வயாவிளான் திரு. சி. நல்லதம்பி என்பவரால் மேற்படியூர் "கோணைப்பிள்ளைசீமா"விலுள்ள ஆனந்தகுமரன் அச்சுநிலையத்தில் 1938-ம் வருஷம் ஆவணிமீ 9-ந்திகதி செவ்வாய்க்கிழமை அச்சிடுவிக்கப்பெற்று வெளியிடப்பெற்றது.